பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**23 09 2026** **WEDNESDAY** **6.45 AM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. உடல் ஆரோக்கியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் பொருட்களை ஆதரிப்பதை திரையுலக பிரபலங்கள் தவிர்க்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.
2. வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நிறைவேற்றுவதற்கான முக்கிய சக்தியாக இளையோர்கள் திகழ வேண்டும் என்று ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் வலியுறுத்தியுள்ளார்.
3. குறைகள் மற்றும் புகார்களை தெரிவிக்கவரும் மக்களிடம் அதிகாரிகள் கனிவுடன் நடந்துகொள்ள வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு ராஜ்மோகன் அறிவுறுத்தியுள்ளார்.
4. சென்னை உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களிலும், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்திய பேட்மிண்டன் அணி அரையிறுதியில் சீன அணியை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

உடல் ஆரோக்கியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் பொருட்களை ஆதரிப்பதை திரையுலக பிரபலங்கள் தவிர்க்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்

குஜராத் மாநிலம் கெவாடியாவில் நேற்று 72-ஆவது தேசிய திரைப்பட விருதுகளை வழங்கி அவர் பேசினார்.

திரையுலகில் மிகப்பெரிய நட்சத்திரங்களாக விளங்குவோர் மக்களின் உடல்நலத்திற்கு பாதிப்புகளை ஏற்படுத்துக்கூடிய பொருட்களுக்கு ஆதரவாக செயல்படக்கூடாது என்று வலியுறுத்தினார்.

திரையுலக கலைஞர்கள் மக்களிடையே, குறிப்பாக இளையோர்கள் மத்தியில் பிரபலமாக திகழ்வதுடன், அவர்களிடம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவர்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

எனவே, இளைஞர்களிடையே ஒழுக்கத்துடன் கூடிய வாழ்க்கை முறையின் முக்கியத்துவத்தை திரையுலகினர் வலியுறுத்த வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

திரைப்பட கலைஞர்களின் கருத்துகளை மக்கள் ஆர்வத்துடன் கேட்டு அவற்றை பின்பற்றி வருவதாகவும் குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

தேசிய திரைப்பட விருதுகளை பெற்றுள்ள அனைத்துக் கலைஞர்களுக்கும் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்திய திரைப்படத் துறையின் செழுமையான பாரம்பரியத்தை வலுப்படுத்தக் கூடிய வகையில் விருது பெற்ற கலைஞர்களின் திறமை, படைப்பாற்றல் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை உணர்த்தும் வகையில் அவர்களின் தேர்வு அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தங்களின் அயராத உழைப்பை நல்கிய நடிகர்கள், இயக்குநர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத்துறையை சார்ந்த அனைவருக்கும் தமது பாராட்டுகள் என்றும், அவர்களின் பயணத்தில் இந்த விருது மேலும் ஊக்கம் அளிக்கட்டும் என்றும் டாக்டர் எல். முருகன் அதில் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நிறைவேற்றுவதற்கான முக்கிய சக்தியாக இளையோர்கள் திகழ வேண்டும் என்று ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் தனியார் பல்கலைக்கழகத்தில் மை பாரத் அமைப்பின் சார்பில், நேற்று வந்தே மாதரம் முகாமை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

பல்வேறு மொழிகள், கலாச்சாரங்களால் வேறுபட்டு இருந்தாலும், இந்தியர்கள் அனைவரும் சகோதர, சகோதரிகள் என்ற உணர்வுடன் ஒற்றுமையாக உள்ளனர் என்று திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கூறினார்.

<<<<<>>>>>>

தமிழகத்தில் தவெக அரசு பொறுப்பேற்றதிலிருந்து பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக 200-க்கும் மேற்பட்ட பாலியல் குற்றங்கள் நடைபெற்றிருப்பதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இவற்றில் 30-க்கும் மேற்பட்ட குற்றங்களில் தொடர்புடையதாக தவெக-வினர் அடையாளம் காணப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அருகே ஒரு பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த தவெக நிர்வாகியின் தம்பியை தட்டிக்கேட்டவர்களை காவலர் முன்னிலையில் அந்த நிர்வாகியின்

குடும்பத்தினர் மிரட்டியதாக வெளியான காணொலி அதிர்ச்சி அளிப்பதாக அவர் கூறியுள்ளார்.

முதலமைச்சர் திரு விஜய் அவருடைய கட்சியினருக்கு ஒழுக்கத்தையும், கண்ணியத்தையும் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

’’மிஷன் ஒலிம்பிக் **2036**’’ சிறப்பு அதிகாரியாக காத்திருப்போர் பட்டியலில் இருந்த ஐ பி எஸ் அதிகாரி திரு மயில்வாகணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலரின் கட்டுப்பாட்டில் அவர் செயல்படுவார் என்று தமிழக அரசு வெளியிட்டுள்ள உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

குறைகள் மற்றும் புகார்களை தெரிவிக்கவரும் மக்களிடம் அதிகாரிகள் கனிவுடன் நடந்துகொள்ள வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு ராஜ்மோகன் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையில் நேற்று வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து அதிகாரிகளுடன் அவர் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது பேசிய அவர், மக்கள் தெரிவிக்கும் புகார்களை கட்சி பாகுபாடின்றி அதிகாரிகள் கேட்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தினார்.

வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் தூய்மைப் பணியாளர்களின் பங்குதான் மிகவும் முக்கியமானது என்பதால், அவர்களுடன் இணைந்து செயல்படுவது அவசியம் என்றும் திரு ராஜ்மோகன் குறிப்பிட்டார்.

<<<<<>>>>>>

பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் தமிழக அரசின் திட்டங்களை விரைந்து நிறைவேற்ற ஏதுவாக கவனத்துடனும், துடிப்புடனும் பணியாற்ற வேண்டும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு ஆதவ் அர்ஜுனா கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னையில் நேற்று தமது துறை சார்பில் நடைபெற்றுவரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

அப்போது பேசிய திரு ஆதவ் அர்ஜுனா. அரசால் மேற்கொள்ளப்படும் உள்கட்டமைப்புப் பணிகள் பொதுமக்களுக்கு நேரடியாக பயனளிக்கும் வகையில் தரமானதாகவும், குறித்த காலத்திற்குள் நிறைவேற்றப்படுவதையும் அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

ஒப்பந்த விதிமுறைகள், அரசாணைகள் மற்றும் நடைமுறைகள் முறையாக பின்பற்றப்பட வேண்டும் என்றும், வெளிப்படைத் தன்மை அனைத்து நிலைகளிலும் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் திரு ஆதவ் அர்ஜுனா குறிப்பிட்டார்.

<<<<<>>>>>>

சென்னை உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களிலும், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடமேற்கு வங்கக்கடல் பகுதியில் ஆந்திராவையொட்டி நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும் என்பதால், சென்னை,

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், ராணிப்பேட்டை மாவட்டங்களில் இன்று இடியுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

மாநிலத்தின் ஏனைய மாவட்டங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் இடி மின்னலுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

*இருவரிச் செய்திகள்*

பாகிஸ்தானில் போராட்டங்களை கட்டுப்படுத்த அதிக அளவிலான ஆயுதங்களை அந்நாட்டு அதிகாரிகள் பயன்படுத்துவதாக ஐ நா மனித உரிமைகளுக்கான தூதர் **Volker Turk** குற்றம் சாட்டியுள்ளார்.

------------

ரஷ்யா — யுக்ரைன் இடையேயான மோதலை முடிவுக்கு கொண்டுவர விரைவில் ஒப்பந்தம் எட்டப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

------------------

இந்தோ — பசிபிக் பகுதியில் பாதுகாப்பு தொழில்நுட்ப ஒத்துழைப்பு, கூட்டு ராணுவ பயிற்சியை வலுப்படுத்துவது குறித்து இந்தியாவும், ஜப்பானும் ஆலோசனை மேற்கொண்டுள்ளன.

-------------------

மும்பையில் பொது இடங்களிலும், சாலைகளிலும் பட்டாசுகள் வெடிக்க பம்பாய் உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

----------------

பொது விநியோகத் திட்ட கைபேசி ஆய்வு செயலியை மாநில உணவுத்துறை அமைச்சர் திரு வெங்கடரமணன் நேற்று தொடங்கிவைத்தார்.

------------------

தமிழகம் முழுவதும் 40 இடங்களில் நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் நேற்று சோதனை மேற்கொண்டு, ஆன்லைன் பரிவர்த்தனைகள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

-------------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராமசபை கூட்டங்கள் நடத்தப்படும் என்று ஆட்சியர் திரு நல்லசிவன் தெரிவித்துள்ளார்.

----------------

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் ரயில் நிலையத்தில் அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ், 17 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் பணிகளை தெற்கு ரயில்வே மதுரை கோட்ட மேலாளர் திரு ஓம். பிரகாஷ் மீனா நேற்று ஆய்வு செய்தார்.

--------------

சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில், மாவட்ட தேர்தல் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான திரு சமீரன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

---------------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 15 மண்டலங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் ஒருபகுதியாக நேற்று, பயன்படுத்தப்படாத டயர்கள் உள்ளிட்ட பொருட்கள் கண்டறியப்பட்டு அகற்றப்பட்டன.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்திய பேட்மிண்டன் அணி அரையிறுதியில் இன்று சீன அணியை எதிர்கொள்கிறது.

ஜப்பானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்திய அணி, ஜப்பான் அணியை வென்றது.

இதேபோல், இன்று நடைபெறும் மகளிர் துப்பாக்கிச்சுடுதல் குழு மற்றும் தனிநபர் பிரிவில் ஒலிம்பிக் போட்டியில் இரண்டு பதக்கங்களை வென்ற மனுபாக்கர், பங்கேற்கிறார்.

பத்து மீட்டர் மகளிர் ஏர் பிஸ்டல் பிரிவில் அவர், **Suruchi Signgh, Esha Singh** ஆகியோருடன் குழு பிரிவில் பங்கேற்கிறார்.

பளுதூக்குதல் மகளிர் **49** கிலோ எடைப்பிரிவு இறுதிப்போட்டியில் மீராபாய் சானு பங்கேற்கிறார்.

**Wushu** மகளிர் **60** கிலோ எடைப்பிரிவில் **Roshibina Devi -** இந்தோனேஷியாவின் **Thania-**வை அரையிறுதியில் எதிர்கொள்கிறார்.

**<<<<<END>>>>>>**